தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.09.2013**

## வடகிழக்கு பருவமழை: சராசரியாக இருக்கும்



சென்னையில் செய்தியாளர்களுக்கு வியாழக்கிழமை பேட்டியளிக்கிறார் இந்திய வானிலை ஆய்வு மையத்தின் பொது இயக்குநர் எல்.எஸ். ரத்தோர். உடன் (இடமிருந்து) சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன், துணை இயக்குநர் ஒய்.இ.ஏ. ராஜ்.

தமிழகத்தில் இந்தாண்டு வடகிழக்கு பருவமழை சராசரியாகவே இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மைய பொது இயக்குநர் எல்.எஸ். ரத்தோர் தெரிவித்தார். தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய தென் மாநிலங்களில் உள்ள வானிலை ஆய்வு மையங்களின் அதிகாரிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் சென்னை வானிலை ஆய்வு மையத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் ஆலோசனைக் கூட்டத்தில் இந்திய வானிலை ஆய்வு மைய பொது இயக்குநர் எல்.எஸ். ரத்தோர் கலந்து கொண்டார். இதில் வானிலை ஆய்வு மையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, எதிர்கால திட்டங்களை வகுப்பது ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது. பின்னர் நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் எல்.எஸ். ரத்தோர் கூறியது: இப்போது செல்போன் குறுஞ்செய்தி மூலம் வானிலை தகவல்களை அளிக்கும் முறையின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. சுமார் 34 லட்சம் விவசாயிகள் செல்போன் தொழில்நுட்பம் மூலம் வானிலை தகவல்களை பெறுகின்றனர். மேலும் கிசான் போர்டல் தொழில்நுட்பத்தில் இதுவரை 2.8 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். இதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். நாட்டின் 12-வது ஐந்தாண்டு திட்டத்தில் வட்டார அளவில்

விவசாயிகளுக்கு வானிலை முன்னறிவிப்பை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது முதல்கட்டமாக 240 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும். இந்தியாவில் தென்மேற்கு பருவமழையின் போது கூடுதல் மழை பெய்துள்ளது. இதில் தமிழகத்தில் மட்டும் 19 சதவீத அதிகம். மேலும், வடகிழக்கு பருவமழை இந்தாண்டு சராசரியாக இருக்கும். இதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. கடந்தாண்டு வடகிழக்கு பருவமழையின்போது தமிழகத்தில் 16 சதவீதம் குறைவான மழையே பெய்தது. தீவிரமான காலநிலை மாற்றத்தை கணிக்க நீண்ட கால வானிலை தகவல்கள் ஆராயப்பட்டு வருகின்றன. தற்போது இமயமலைப் பகுதிகளில் புதிதாக 9 ரேடார் கருவிகள் பொருத்தப்படவுள்ளன. இதன் மூலம் வானிலை மாற்றங்களை கண்டறிய முடியும் என்றார் அவர். இந்த சந்திப்பின்போது சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குர் ரமணன், துணை இயக்குநர் ஒய்.இ.ஏ. ராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

## பண்ணை பசுமை கடைகளில் பெரிய வெங்காயம் விலை ரூ.40

சென்னையில் உள்ள பண்ணை பசுமை கடைகளில் பெரிய வெங்காயம் கிலோவுக்கு ரூ.40-க்கு விற்கப்படுவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காமதேனு வளாகத்தில் செயல்படும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜு வியாழக்கிழமை ஆய்வு நடத்தினார். அப்போது அவர் கூறியது: வெளிச்சந்தையில் வெங்காயம் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஆனால் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் கடந்த ஒரு மாதமாக ரூ.40-க்கு மட்டுமே வெங்காயம் விற்கப்பட்டு வருகிறது. பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் இதுவரை ரூ.4.5 கோடி மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்றார் அமைச்சர் செல்லூர் கே.ராஜு.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

திருவள்ளூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது. இது குறித்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் உள்ள அனைத்து கிராமம் மற்றும் குக்கிராமங்களில் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய்த் தடுப்பூசி திட்டத்தின் கீழ் 2013-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை 4-வது சுற்று தடுப்பூசி முகாம் முடிவடைந்துள்ளது. தற்போது 2013-ம் ஆண்டு செப்டம்பர் 3-வது வாரம் முதல் 21 நாள்களுக்கு 5-வது சுற்று தடுப்பூசி முகாம் தொடங்கப்பட்டுள்ளது. 21 நாள்கள் நடைபெறும் இம்முகாமில் ஒவ்வொரு கிராமத்திற்கும்

தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படும். இது தொடர்பாக கிராமப்புற விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து கிராமங்களிலும் சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் கால்நடை மருத்துவர்களின் அறிவுரைப்படி, தங்களது கால்நடைகளை பதிவு செய்து அங்கு குறிப்பிடப்படும் இடங்களில் இந்த தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நோய் தாக்கி, நீரின்றி கருகும் கரும்புப் பயிர்

மதுரை மாவட்டம், வெள்ளலூர் பகுதியில் சுமார் 900 ஏக்கர் கரும்புப் பயிர் கிணறுகளில் போதிய நீரின்றி கருகி வருகிறது. இந்த நிலையில் வெள்ளை ஈ தாக்குதலில் பெரும்பாலான கரும்புப் பயிர்கள் காய்வதைத் தடுக்க இயலாமல் கைவிட்ட விவசாயிகள் அரசு உதவியை எதிர்பார்க்கின்றனர். வெள்ளலூர் வட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் கரும்பு சாகுபடியை பல ஆண்டு காலமாகச் செய்து வருகின்றனர். சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேல் இப் பகுதியில் கரும்பு பயிரிடுகின்றனர். இதில் பெரும் பகுதி கரும்பை விவசாயிகளே கிரஷர் கொண்டு அரைத்து வெல்லம் தயாரிப்பது வழக்கம். சில விவசாயிகள் கரும்பை அலங்காநல்லூர் தேசியக் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்பி வருகின்றனர். வெல்லம் தயாரிக்கும் விவசாயிகள் மதுரை வெல்லக் கமிஷன் கடைகளில் வட்டிக்கு முன்பணம் பெற்று கரும்பு சாகுடிபயை மேற்கொள்கின்றனர். சர்க்கரை ஆலைக்கு கரும்பை அனுப்பும் விவசாயிகள் தொடக்க வேளாண். கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு பெரியாறு அணையிலிருந்து இப் பகுதிக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. மேலும், போதிய மழைப்பொழிவும் இல்லை. இதனால் நிலத்தடி நீர் வளம் மிகவும் குறைந்துவிட்டது. விவசாயிகள் கிணறுகளை 25 அடியிலிருந்து 30 முதல் 50 அடி ஆழம் வரை தோண்டியும் அதற்குமேல் 200 முதல் 500 அடி வரை ஆழ்குழாய் கிணறுகளை அமைத்தும் போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. அதனால் அதிகப் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள கரும்புப் பயிருக்கு சுழற்சி முறையில் தண்ணீர் பாய்ச்சி வந்தனர். மேலும், தற்போது தென்மேற்கு பருவமழையும் இந்த வட்டாரத்தில் கைகொடுக்கவில்லை. இந்த நிலையில், கடும் வெப்பம் காரணமாக கரும்புப் பயிரில் வெள்ளை ஈ தாக்குதல் மேலவலசை, பழையூர்பட்டி பகுதியில் ஆரம்பித்தது. தற்போது வெள்ளை ஈ தாக்குதல் மேலும் பரவத் தொடங்கியுள்ளது. வேளாண் துறையினர் மற்றும் மதுரை வேளாண் அறிவியல் மையத்தினரும் வெள்ளை ஈ தடுப்பு மருந்து, தடுப்பு முறைகளைப் பின்பற்ற விவசாயிகளுக்கு ஆலோசனை தெரிவித்தனர். ஆனால், கிணறுகளில் போதிய நீரின்றி மேலும் பணம் செலவிட விவசாயிகள் தயங்குகின்றனர். ஏற்கெனவே கரும்புப் பயிரை கடந்த 7, 8 மாதங்கள் வளர்க்க ரூ.15 முதல் ரூ.20 ஆயிரம் வரை ஏக்கருக்குச் செலவிட்டுள்ளதாக ஆலம்பட்டி பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். விவசாயிகள் பலர் கிணறுகளில் நீரின்றியும் வெள்ளை ஈ தாக்கியும் பட்டுப்போன

கரும்புப் பயிரை பராமரிக்க இயலாமல் மாடுகளை மேயவிட்டும் தீயிட்டும் கொளுத்திவிட்டனர். சிவகங்கை மாவட்டத்தில் ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வரை ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு காப்பீட்டிலிருந்து பணம் வழங்குகின்றனர். வெள்ளலூர் பகுதியில் உண்மையில் ஏக்கருக்கு பல ஆயிரம் செலவிட்டு பெரும் நஷ்டத்தை அடைந்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்க மேலூர் தொகுதி எம்.எல்.ஏ. மற்றும் எம்.பி. ஆகியோர் உதவ முன்வர வேண்டும் என வெள்ளலூர் பகுதி விவசாயிகள் வலியுறுத்தினர். மேலும், இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கச் செயலர் அடைக்கிவீரணன் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 79.31 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 79.31 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,200 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 5,045 கன அடி நீரும், வாய்க்காலில் 2,400 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 15.32 டி.எம்.சி.

## அவல்பூந்துறையில் மஞ்சள் மின்னணு மையம்

அவல்பூந்துறை ஒழுங்குமுறை வேளாண் விற்பனைக் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள மஞ்சள் மின்னணு ஏல மையத்தை, தமிழ்நாடு வேளாண் மற்றும் வணிகத் துறை இயக்குநர் அனில் மேஷ்ரம் வியாழக்கிழமை திடீர் ஆய்வு செய்தார். அவல்பூந்துறை ஒழுங்குமுறை வேளாண் விற்பனைக்கூடத்தில் கொப்பரை, எள், பருத்தி, தேங்காய் உள்ளிட்ட பல்வேறு வேளாண் உற்பத்திப் பொருட்கள் விற்பனை நடைபெறுகிறது. தமிழக அளவில் மஞ்சள் உற்பத்தி மற்றும் விற்பனை பிரதான இடத்தை வகித்து வருகிறது. எனவே, மஞ்சள் விற்பனையை மின்னணு முறையில் அவல்பூந்துறையில் நடைமுறைப்படுத்த ஆரம்பகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை அனில் மேஷ்ரம் வியாழக்கிழமை மாலையில் ஆய்வு செய்தார். ஆய்வின்போது ஈரோடு மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம், வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ராமசுப்பிரமணியம், கோவை மைய வேளாண் (விற்பனை வாரியம்) உதவி இயக்குநர் அல்தாப் ஆகியோர் உடனிருந்தனர்.

ஆய்வின்போது, அவல்பூந்துறை விற்பனைக்கூடம் 16 ஏக்கர் பரப்பளவில் சொந்தக் கட்டடத்தில் 6 ஏலக் கொட்டகைகளுடன் இயங்கி வருவதையும் இதனை மேம்படுத்தவும் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார். அப்போது, மொடக்குறிச்சி, அவல்பூந்துறை, அரச்சலூர், வெள்ளோடு சுற்றுப்பகுதிகளில் உள்ள 60-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி பயிற்சியில் விவசாய

சாகுபடி பொருள்களை பாதுகாப்பது, சேமிப்பது, அதிக விலைக்கு விற்பனை செய்வது மற்றும் தென்னை, மக்காச்சோளம், கடலை உள்ளிட்ட பயிர்களுக்கு மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்றும் முறைகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து, வேளாண் வணிகத் துறை சார்பாக மஞ்சள் தரம் பிரித்தல், ஈரப்பதம் கண்டறிதல், கலப்படத்தை எளிதாக கண்டறிதல் என செயல்முறை விளக்கமும் அளிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாட்டை மொடக்குறிச்சி உதவி வேளாண்மை அலுவலர் சுரேந்திரன், அவல்பூந்துறை வேளாண் விற்பனைக் கூட காண்காணிப்பாளர் அர்ச்சுணன் ஆகியோர் செய்திருந்தனர்.

## கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்: பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் இம் மாதம் 4-வது வாரம் முதல் நடைபெறும் கால்நடைகளுக்கான கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்களுக்கு விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு அழைத்துச் சென்று பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 6,86,548 கால்நடைகளுக்கு வாய் மற்றும் கால் கோமாரி நோயத் தடுப்பூசி போடும் பணிகள் இம் மாதம் 4-வது வாரம் முதல் 21 நாள்களுக்கு நடைபெறுகிறது. இதற்கான தடுப்பூசி மருந்துகள் மாவட்டத்தில் உள்ள கால்நடை பெரு மருத்துவமனைகளில் உள்ள குளிரூட்டும் அறையில் பாதுகாப்புடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்நோய் காற்று மூலம் எளிதில் பரவும் தன்மை கொண்டது. எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது பசுக்கள், எருதுகள், எருமைகள் மற்றும் 4 மாதத்துக்கு மேற்பட்ட இளங் கன்றுகளை இம் மாதம் 4-வது வாரம் முதல் நடைபெறும் சிறப்பு தடுப்பூசி முகாம்களுக்கு அழைத்துச் சென்று பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

## உழவர் மன்றங்களின் சார்பில் காய்கறி ஏல விற்பனை மையம் தொடக்கம்

நாமகிரிப்பேட்டை அருகேயுள்ள மெட்டாலாவில் உழவர் மன்றங்களின் சார்பில், காய்கறி ஏல விற்பனை மையம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான விழா புதன்கிழமை நடைபெற்றது. நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டையை அடுத்த மெட்டாலா சுற்றியுள்ள பகுதிகளான கார்கூடல்பட்டி, முள்ளுக்குறிச்சி, ஆயில்பட்டி, பெரப்பன்சோலை உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. மலை மேடான இந்தப் பகுதியில் தக்காளி, வாழை, வெண்டை,

கத்தரி, பீர்க்கங்காய், பாகற்காய், பீட்ரூட், முள்ளங்கி மற்றும் கீரை வகைகள், அதிக அளவில் விளைவிக்கப்படுகின்றன. மேலும், இந்தப் பகுதியில் விவசாயிகளை ஒருங்கிணைத்து காமதேனு உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் கீழ் பல்வேறு உழவர் மன்றங்கள் உள்ளன. தற்போது, மெட்டாலாவைச் சுற்றியுள்ள கிராமங்களில் விளையும் காய்கறிகள் மெட்டாலாவில் தனியார் மண்டிகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த மண்டிகளுக்கு குறிப்பிட்டத் தொகையை கமிஷனாக வழங்க வேண்டும். இதனால், விவசாயிகளின் நலன் கருதியும், கட்டுபடியான விலை கிடைக்கவும் உழவர் மன்றங்கள் கூட்டமைப்பு சார்பில், காய்கறி ஏல விற்பனை மையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த ஏல விற்பனை மையத்தை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தொடங்கி வைத்தார். இதன்மூலம் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## "பருவநிலை மாற்றத்துக்கேற்ப விவசாயம் மாற வேண்டும்'

பருவகால மாற்றத்துக்கு ஏற்ப விவசாயம் செய்ய விவசாயிகளிடம் மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்றார் தேசிய விவசாய ஆராய்ச்சி கழகத்தின் மானாவரி விவசாய பிரிவு இயக்குநர் டாக்டர். பி. வெங்கடேஸ்வரலு. எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் தலைமையில் புதன்கிழமை நடந்த பல்துறை அலுவலர்கள் கலந்தாய்வு கூட்டத்தில் பங்கேற்று மேலும் அவர் பேசியது:
விவசாய துறையைச் சேர்ந்த ஆராய்ச்சி நிறுவனங்கள் பருவகால மாற்றத்திற்கு ஏற்ப விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு உதவ வேண்டும். பருவகால மாற்றத்தை தாக்குப்பிடிக்கும் விதைகள், பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு முறைகளையும் ஆராய்ச்சி செய்து விவசாயிகளுக்கு பரிந்துரைக்க வேண்டும். விவசாயத்தில் பல பிரச்னைகள் இருந்தாலும் விவசாயிகள் நிலத்தையும் நீரையும் பாதுகாக்க, அனைத்து துறைகளும் உதவ வேண்டும். உயர் ரக விதைகளையும், வறட்சியை தாங்கி வளரக்கூடிய பயிர் ரகங்களையும் விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். கால்நடைகளை பாதுகாக்க வேண்டும் என்றார். தொடர்ந்து, மண் பரிசோதனை செய்த விவசாயிகளுக்கு மண் வள அட்டைகளை வழங்கினார். தொடர்ந்து, எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் முனைவர் ஆர்.எஸ்.எஸ். ஹாப்பர், தேசிய பயிறுவகை ஆராய்ச்சி நிறுவன தலைவர் முனைவர் ஆர்.பி. ஞானமலர், வம்பன் கே.வி.கே தலைவர் எம். அசோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஆராய்ச்சி நிறுவன அலுவலர் தே. சைலமோனி வரவேற்றார். தே. ராமதாஸ் நன்றி கூறினார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்காத அதிகாரிகளுக்கு ஆட்சியர் எச்சரிக்கை

தூத்துக்குடியில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்காத அதிகாரிகளை மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் எச்சரித்தார்.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் ம. ரவிக்குமார் தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டம் தொடங்கியதும் மாவட்டத்தில் வறட்சி நிவாரணத்தொகை வழங்கியதில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக விவசாயிகள் பலர் எழுந்து குரல் எழுப்பினர்.

இதற்கு பதிலளித்துப் பேசிய மாவட்ட ஆட்சியர், மாவட்டம் முழுவதும் ரூ.103 கோடி வரை வறட்சி நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் லட்சக்கணக்கான விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர், கூட்டத்தில் மொத்தமாக குரல் எழுப்பாமல் எந்தப் பகுதியில் முறைகேடு நடைபெற்றுள்ளது என குறிப்பிட்டு தெரிவிக்குமாறு கூறினார்.

இதையடுத்து விவசாயிகள் தெய்வசெயல்புரம், வல்லநாடு பகுதிகளில் முறைப்படி வறட்சி குறித்து கணக்கெடுப்பு நடத்தவில்லை என்றும், சில அதிகாரிகள் வேண்டுமென்ற இந்தப் பகுதியை புறக்கணித்துவிட்டதாகவும் புகார் தெரிவித்தனர். இதுதொடர்பாக, தன்னை வெள்ளிக்கிழமை (செப். 20) நேரில் சந்தித்து புகார் அளிக்குமாறு ஆட்சியர் தெரிவித்தார்.

மேலும், குறைதீர் கூட்டத்தில் வேளாண்மைத் துறையைச் சேர்ந்த பெரும்பாலான உதவி இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொள்ளவில்லை என்றும், விவசாயிகளை சந்திக்க சில அதிகாரிகள் மறுத்து வருவதாகவும் விவசாயிகள் குற்றம்சாட்டினர். அப்போது, கூட்டத்தில் வேளாண்மைத் துறை உதவி இயக்குநர்கள் யாரும் இல்லாததால் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்பதைவிட அதிகாரிகளுக்கு வேறு வேலை எதுவும் கிடையாது. கூட்டத்தில் பங்கேற்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் எச்சரித்தார்.

மேலும், மாவட்டத்தில் விதை மற்றும் உரம் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்கும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தேவையான விதைகள், உரங்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், கோரம்பள்ளம் குளம் பகுதியில் கால்வாய் சீரமைக்கும் பணியை ஒருவாரத்துக்குள் முடித்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆட்சியர் உத்தரவிட்டார்.

## கால்நடைகளுக்குகோமாரி நோய் தடுப்பூசி

விழுப்புரம் மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி 6.63 லட்சம் கால்நடைகளுக்குப் போடப்பட உள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விழுப்புரம் மாவட்டத்தில் தேசிய அளவிலான கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியையொட்டி, 6.63 லட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட உள்ளது.

இதற்காக 140 தடுப்பூசிப் பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டம் முழுவதும் உள்ள ஒவ்வொரு ஊராட்சி கிராம சபா கூட்டங்களில் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.இப் பணி 18-9-2013 முதல் தொடர்ந்து மூன்று வாரங்கள் நடைபெற உள்ளது. கால்நடை எண்ணிக்கைகளுக்கு ஏற்ப தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.எனவே, கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு தவறாமல் கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் என்றார் மாவட்ட ஆட்சியர்.

### பருவமழைமுன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் :

உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் புயல் மற்றும் மழை குறித்த முன்னெச்சரிக்கைத் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு வட்டாட்சியர் ஆர்.லலிதா தலைமை வகித்தார். தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் ராஜு, மண்டலத் துணை வட்டாட்சியர்கள் வெங்கடேசன், சுப்புராயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், வடகிழக்கு பருவமழைத் தொடங்க உள்ளதால் அதனை எதிர்கொள்வதற்கு மக்கள் தயாராக இருக்க வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள் விழிப்புடன் செயல்பட்டு அந்தந்தப் பகுதியில் ஏற்படும் மழை பாதிப்புகளை 044-28271951 எண்ணிலும், புயல், சுனாமி குறித்தத் தகவல்களை 040-23895002 என்ற எண்ணிலும், இலவச அழைப்புகளுக்கு 1077 என்ற எண்ணிலும் தொடர்புகொண்டுத் தெரிவிக்கலாம் என வட்டாட்சியர் ஆர்.லலிதா தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.09.2013**

## பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு ரூ.4 மானியம் வழங்கிட வேண்டும்

வள்ளியூர் : கால்நடை தீவனங்களின் விலை உயர்வால் பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு ரூ.4 அரசு மானியம் வழங்கிட வேண்டுமென தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்க மாநில தலைவர் செங்கோட்டுவேல் கூறியுள்ளார். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்கத்தின் நெல்லை மாவட்ட நிர்வாகிகள் அறிமுக விழா மற்றும் பால் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி அம்பலவாணபுரம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்க மாநில தலைவர் செங்கோட்டுவேல் தலைமை வகித்தார்மாநில பொதுச் செயலாளர் ராஜேந்திரன் ., பொருளாளர் ராமசாமி கவுண்டர், சட்ட ஆலோசகர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்ஆவரைகுளம் இளங்கோ கலைசிகாமணி . வரவேற்றார். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்க நெல்லை மாவட்ட தலைவராக ஆவரைகுளம் இளங்கோ கலைசிகாமணியும், பொதுச் செயலாளராக காவல்கிணறு வக்கீல் ராமநாராயணன், பொருளாளராக ஆவரைகுளம் கண்ணன், துணைத்தலைவராக அடங்கார்குளம் முருகேசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இணை செயலாளர்களாக பழவூர் சுப்பையா, ஆவரைகுளம் ஜெயபால், உக்கிரன்கோட்டை எபனேசர், கீழஉப்பூரணி பவுல், பால்பாண்டி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்தொடர்ந்து மாநில நிர்வாகிகள் . பால் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடினர், பின்பு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்க மாநில தலைவர் செங்கோட்டுவேல் செய்தியாளர்களிடம்

கூறியதாவது-: தமிழ்நாட்டில் தினசரி சராசரியாக 25 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது கடந்த .2011ம் ஆண்டு பால் விலை லிட்டருக்கு ரூ.2 அதிகரிக்கப்பட்டதுதமிழகத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கு வரும் பசுவின் . பால் லிட்டருக்கு ரூ.20 வீதமும், எருமைபால் ரூ.6 வீதமும் கொள்முதல் செய்யப்படுகிறது கடந்த இரண்டு ஆண்டுகளில் கால்நடை தீவனங்களின் விலை . 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை உயர்ந்துள்ளதுஇதனால் பால் . உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கர்நாடக மாநிலத்தில் 6 ஆண்டுகளுக்கு முன் தினசரி 14 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுஅந்த அரசு பால் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தும் . விதமாக அரசு நிதியிலிருந்து லிட்டர் ஒன்றுக்கு ரூ.4 மானியம் வழங்கி வருகின்றனர். இதனால் தற்போது அங்கு தினமும் 63 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படும் நிலைக்கு உயர்ந்துள்ளதுகர்நாடகாவை போல் தமிழக . அரசும் நுகர்வோர்கள் பாதிக்காத வகையில் 2 லிட்டர் பாலுக்கு ரூ.4 அரசு நிதியிலிருந்து பால் உற்பத்தியாளர்களுக்கு மானியமாக வழங்கவேண்டும்தமிழக . முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அவினர் க.க.மு.தி.டந்த தேர்தல் அறிக்கையின் போது தினசரி 1 கோடி லிட்டர் பால் உற்பத்தி செய்ய இலக்கு எட்ட முடியும் என தனது தேர்தல் அறிக்கையில் கூறியிருந்ததுஆனால் இதுவரை அந்த . இலக்கை எட்ட அரசு எந்தவித முயற்சியும் செய்யவில்லை. அரசு இதனை கண்டு கொள்ளாவிட்டால் பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்கம் சார்பில் மாநாடு நடத்தப்பட்டு பல்வேறு போராட்டங்கள் நடத்தவுள்ளோம்தமிழ்நாடு கிராம . அளவிலான9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கம் மூலம் 24 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர் கடந்த .30 ஆண்டுகளாகவே அவர்களுக்கு மாதச் சம்பளம் உயர்த்தப்படவில்லை . போனஸ் .பணிநிரந்தரம் செய்யப்படவில்லை தொகையும் உயர்த்தப்படவில்லை . நீண்ட கால அவர்களின் கோரிக்கையை அரசு உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்மாவட்ட ., ஒன்றிய, சங்கங்களில் காலியாக உள்ள பணியிடங்களை கிராம சங்கங்களில் பணி செய்யும் தகுதியுள்ளவர்களுக்கு அப்பணியில் பணியமர்த்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

## விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்திற்கு வருவதை விட, விவசாய அதிகாரிகளுக்கு வேறு என்ன வேலை

தூத்துக்குடி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்திற்கு விவசாய அதிகாரியே : வராமல் இருந்தால் விவசாயிகளுக்கு எப்படி பதில் தெரிவிக்க முடியும்இந்த . கூட்டத்தில் கலந்துகொள்வதை விட விவசாய அதிகாரிகளுக்கு வேறு என்ன வேலை இருக்கிறது என்று கலெக்டர் காட்டமாக கேட்டார்தூத்துக்குடி மாவட்ட . விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக்டர் ரவிக்குமார் தலைமையில் நடந்ததுஓ முத்து.ஆர்.டி ., வேளாண்மை இணை இயக்குனர் (பொ) பொன்காத்த பெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்கலெக்டரின் நேர்முக . உதவியாளர் தூத்துக்குடி மாநகராட்சி.கனகராஜ் வரவேற்றார் (வேளாண்மை) செயற்பொறியாளர் ராஜகோபாலன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பாண்டியன், வேளாண்மை உதவி இயக்குனர் மதியழகன் (தரக்கட்டுப்பாடு), தோட்டக்கலை உதவி இயக்குனர் பழனிவேலாயுதம் மற்றும் அதிகாரிகள், விவசாய சங்க தலைவர்கள் கலந்து கொண்டனர்அடுத்த மாதம் பருவமழை . விவசாய .துவங்கிவிடும் பணிகளை உடனடியாக துவக்க வேண்டிய நிலை வரும் . ஆனால் இன்னும்ஓட்டப்பிடாரம் பகுதியில் விவசாய டெப்போக்களில் பல விதைகள் இல்லை, உரங்கள் இருப்பு வைக்கப்படவில்லைமுன் கூட்டியே இது . சம்பந்தமாக விவசாயிகளை அழைத்து வேளாண்மைத்துறை சார்பில் கூட்டம் போடுவார்கள்ஆனால் இன்னும் விவசாயிகளை . அழைத்துகூட்டம் போடப்படவில்லைமக்காச்சோளம் . விதைகள் தான் இந்த பகுதியில் அதிகமாக விதைக்கப்படுகிறது.ஆனால் மக்காச்சோளம் விதை ஸ்டாக் இல்லை . உளுந்து, பாசிப்பயறு விதைகள் மட்டுமே வைத்துள்ளனர்எது அதிக மூவிங் . இருக்கிறதோ அந்த விதையை வைத்திருக்க வேண்டும்ஆனால் ஓட்டப்பிடாரம் . பகுதியில் முக்கியமாக இருக்க வேண்டிய மக்காச்சோள விதை இல்லைவிவசாயிகள் . புகார் தெரிவித்தனர்இதனால் கோபமடைந்த கலெக்டர்., அந்த பகுதி வேளாண்மை உதவி இயக்குனர் இது சம்பந்தமாக பதில் அளிக்குமாறு கூறினார்ஆனால் . வேளாண்மை உதவி இயக்குனர் கூட்டத்திற்கு வரவில்லைவிவசாயிகள் . குறைதீர்க்கும் கூட்டத்திற்கு முக்கியமாக வரவேண்டிய அதிகாரிகளே வேளாண்மைத்துறை அதிகாரிகள் தான்ஆனால் அவர்களே வராவிட்டால் எப்படி . இந்த .என கலெக்டர் டென்ஷன் ஆனார் கூட்டத்திற்கு வராமல் அப்படி என்ன

வேலை வேளாண்மை அதிகாரிகளுக்கு இருக்கிறது என கலெக்டர் காட்டமாக கேட்டார்இதனால் கூட்டத்தில் தி .டீர் பரபரப்பு ஏற்பட்டதுஉதவி இயக்குனர் ஏன் . வரவில்ல என்பதை தெரிவிக்குமாறு வேளாண்மை இணை இயக்குனரிடம் கலெக்டர் தெரிவித்தார்பதில் (பொ) வேளாண்மை இணை இயக்குனர். அளிக்கையில், இது சம்பந்தமாக ஒவ்வொரு உதவி இயக்குனருக்கு சர்குலர் அனுப்பியுள்ளேன்ஆனால் அவர்கள் வரவில .ைலை என்றார்தெய்வச்செயல்புரம் ., வல்லநாடு பகுதில் விவசாயிகளுக்கு இன்னும் வறட்சி நிவாரண நிதி கிடைக்கவில்லை என்று விவசாய சங்க நிர்வாகி பெருமாள் தெரிவித்தார் . தெய்வச்செயல்புரம், வல்லநாடு பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய வேளாண்மை கல்லூரி பேராசிரியர்கள், விவசாய அதிகாரிகளை கொண்ட குழு வரும் என்று கூறினர்ஆனால் இன்னும் குழு வரவில்லை என்றும் . விவசாய சங்க நிர்வாகிகள் புகார் தெரிவித்தனர்இதற்கு கலெக்டர் ரவிக்குமார் . பதில் அளிக்கையில், விவசாய ஆவணமான அடங்கலில் இந்த பகுதியில் 60 சதவீதம் பயிர்கள் விளைந்து விட்டதாக கணக்கு உள்ளது பொதுவாக .50 சதவீதத்திற்கு மேல் விளைந்து விட்டாலே வறட்சி நிவாரணம் கொடுக்க முடியாது . இருப்பினும் அரசு செயலாளரிடம் பேசி இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும்இது சம்பந்தமாக விவசாயிகள் கருத்தினை . அறியும் வகையில் கூட்டம் நடத்தப்படும் என்றார்.

### விவசாயிகள் கவனத்திற்கு

வேடசந்தூர் .வேடசந்தூர் ஒன்றியத்தில் தற்போது மழைபெய்து வருகிறது : விவசாயிகள் வேளாண்மை விரிவாக்கமையத்தில் நெல் மற்றும் நிலக்கடலை, பயிறுவகைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக வேளாண் மை உதவி இயக்குனர் சுருளியப்பன் தெரிவித்துள்ளார்.

நெல்,ஏடிடி .45,89009 டன்,தட்டைபயிறு 1900கிலோ,கதிரி6நிலக்கடலை 30 கிலோவும்,கதிரி6(ஆ நிலக்கடலை(60 கிலோவும் மற்றும் இனக்கவர்ச்சிப்பொறி, கரும்பு ஒட்டுண்ணி, அசோஸ்பைரில்லம், ரைசோபியம் உட்பட உரங்களும் மானியவிலையில் விற்பனைக்கு உள்ளனவிவசாயிகள் இந்த . அரியவாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

## சொட்டுநீர் பாசன பராமரிப்பில் விவசாயிகளிடம் முறையாக பராமரித்தால் 15 ஆண்டுகள் பலன் தரும் விழிப்புணர்வு இல்லை

தேனி சொட்டு நீர் பாசனம் அமைப்பது குறித்து :, விவசாயிகளிடம் விழிப்புணர்வு இல்லைமுறையாக பராமரித்தால் ., ஒரு அமைப்பின் மூலம் 15 ஆண்டுகள் வரை பயனடைய முடியும், என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில், இதுவரை தோட்டக்கலைத்துறை மூலம் 35 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பில் சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் விவசாயிகள் சொந்தமாக சொட்டு நீர் பாசனம் அமைத்துள்ளனர்இந்த பாசன அமைப்புகளை . விவசாயிகள் முறையாக பராமரிப்பது இல்லை.

இதனால் கடந்த 4 ஆண்டுகளில், சொட்டுநீர்ப் பாசன அமைப்புகள் செயல் இழந்து விடுகின்றனவிவசாயிகளுக்கு ., பல லட்சம் ரூபாய் வீணாகிவிடுகிறது.

இதனை முறையாக பராமரித்தால், 15 ஆண்டுகளுக்கு பயன்படுத்த முடியும், என விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை ஆலோசனைகளை வழங்கியுள்ளதுதேனி . :தோட்டக்கலை உதவி இயக்குனர் சுரேஷ் கூறியதாவது

சொட்டுநீர் பாசனத்திற்கு வடிகட்டி சாதனம் இருதயம் போல் முக்கியமானது. இதனை தினமும் சுத்தம் செய்ய வேண்டும்அதேபோல் முக்கிய குழாய் ., துணைக்குழாய்களின் எண்ட் கேப்களை வாரம் ஒருமுறை திறந்து விட்டு, கழிவுநீரை வெளியேற்ற வேண்டும்பக்கவாட்டு குழாய்களில் அடைப்பு . இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குழாய்களில் உப்பு படிவுகள் ஏற்பட்டு அடைப்பு ஏற்படும்இதனை தவிர்க்க .,

சொட்டுநீர்ப் பாசன அமைப்புகளின் தண்ணீர் தன்மைக்கு ஏற்ப, மாதம் ஒருமுறையோ அல்லது, மூன்று மாதத்திற்கு ஒருமுறையோ நீர்த்த அமிலக்கரைசல் மூலம் அடைப்புகளை சரி செய்ய வேண்டும்எலிகளால் . கடிக்கப்பட்ட குழாய்களை அகற்றி விட்டு, அந்த இடத்தில் பக்கவாட்டு குழாய்களை இணைக்க வேண்டும். தினமும் 10 நிமிடமாவது சொட்டுநீர் பாசன அமைப்புகளை இயக்கி நீரை வெளியேற்ற வேண்டும்அதேபோல் மழை பெய்து முடித்த . பின்,

சொட்டுவான்களின் மீது படிந்துள்ள மண் படிவுகளை வெளியேற்ற சொட்டுநீர் பாசன அமைப்புகளை சிறிது நேரம் இயக்க வேண்டும்.
தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை அழைத்து அவ்வப்போது ஆலோசனை பெற வேண்டும்இது போன்ற நடைமுறைகளை . பராமரித்தால் சொட்டுநீர் பாசன அமைப்புகளை, அதிகபட்சம் 15 ஆண்டுகள் வரை பராமரிக்க முடியும்இவ்வாறு . .கூறினார்

## மழையால் மாறிய சூழல் மாடு விற்பனை மந்தம்

ஈரோடு :மழை பெய்து, பசுமைநிலவுவதால், கால்நடை வளர்ப்போர் பசு மற்றும் எருதுகளை விற்க தயக்கம் காட்டுகின்றனர். ஈரோடு, கருங்கல்பாளையத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை மாட்டு சந்தை நடக்கிறது. ஈரோடு, நாமக்கல், கோவை, திருப்பூர் மற்றும் சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சிந்து, சோலை, ஜெர்சி, செவளை, எச்.எஃப்., ரக மாடுகள், எருமைகள் விற்பனைக்கு வந்திருந்தன .திருவண்ணாமலை, சென்னை, ஆத்தூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்தும், கர்நாடகா, கேரளா, கோவா மாநில வியாபாரிகள் அதிகளவில் வந்திருந்தனர்ப .சு மாடுகள், 16,000 முதல், 34,000 ரூபாய் வரையிலும், எருமைகள், 18,000 முதல், 33,500 ரூபாய் வரை விலை போனது. மேலும், 400 பசு மாடுகள், 300 எருமைகள் விற்பனைக்கு வந்தன. ஆந்திராவில் போராட்டங்கள் ஓய்ந்து வருவதால், அங்கிருந்தும் வியாபாரிகள், இடைத்தரகர்கள் வர துவங்கி உள்ளனர்.
ஈரோடு, திருப்பூர், கோவை, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் பெய்து வரும் மழையால் பசுமையான சூழல் நிலவுகிறது .இது கால்நடை வளர்ப்புக்கு ஏற்றதாக உள்ளதுஎனவே கால்நடை வளர்ப்போர் ., பசு மற்றும் எருதுகளை விற்பது குறித்து தயக்கம் காட்டி வருகின்றனர்அதிக . எண்ணிக்கையில் மாடு வைத்திருப்போர் மட்டும், ஓரிரு மாடுகளை கொண்டு வந்து விற்கும் முயற்சியை மேற்கொள்கின்றனர்.வரும் நாட்களில் தொடர்ந்து மழை பெய்து, பசுமையான சூழல் நிலவும் பட்சத்தில் அடுத்தாண்டு ஜனவரி, 20ம் தேதி வரை விற்பனைக்கு

வரும் பசு மற்றும் எருதுகள் எண்ணிக்கை குறைந்தே காணப்படும், என எதிர்பார்க்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்போர் கூறுகையில், வறட்சியான காலத்தில் அதிக விலை கொடுத்து தீவனங்களை வாங்கி போட்டு, கால்நடைகளை பராமரித்தோம்மழை . பெய்து, தற்போது பசுமையான சூழல் நிலவுகிறது. இதேநிலை, அடுத்தாண்டு ஜனவரி வரை நீடிக்க கூடும்பசும்புற்களை மேய்ந்து ., வீடு வந்து சேரும்இதனால் . கால்நடை .பராமரிப்பு செலவு சற்றே குறையும் வளர்ப்புக்கு ஏற்ற சூழல் தொடர்வதால், கால்நடைகள் விற்பனைக்கு கொண்டு வருவது குறைந்து காணப்படுகிறது, என்றனர்.

## நீரோடைகளை தூர்வாராததால் விளை நிலங்கள் சேதம்

கோத்தகிரிகோத்தகிரி பகுதியில் நீரோடைகள் தூர்வாராதப்படாததால்":, மழைநாட்களில் விளை நிலங்கள் சேதம் அடைகிறது' என, சிறு விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கோத்தகிரி வட்டாரத்தில், நெடுகுளா, மளிதேன், வ.சி.உ., நகர், கேர்கம்பை, கூக்கல்தொரை, பனஹட்டி ஹாடா உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கு காரட், பீட்ரூட், பீன்ஸ் மற்றும் உருளைக்கிழங்கு உள்ளிட்ட மலைக்காய்கறி பயிரிட்டுள்ள நிலையில், அறுவடை நாட்களில் விளைப்பொருட்களுக்கு கூடுதல் விலைக் கிடைத்தால் மட்டுமே, ஓரளவு லாபம் கிடைக்கும்.

இந்நிலையில், விவசாய நிலங்களை ஒட்டிச் செல்லும் பெரும்பாலான நீரோடைகள், தூர்வாரப்படாத நிலையில், மழை நாட்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கால், விவசாய பயர்கள் சேதம் அடைய வாய்ப்புள்ளது.

"கடந்த இரு வாரங்களுக்கு முன் பெய்த ஒருநாள் கனமழையில், நெடுகுளா, காவிலோரை பகுதியில்
பல ஏக்கர் பரப்பளவிலான பயிர்கள் சேதம் அடைந்துவிட்டது' என, அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, காய்கறி விவசாயத்தை ஊக்குவிக்கவும், மழைநீரால், தோட்டங்கள் பாதிக்காமல் இருக்கவும், நீரோடைகளை மழை தீவிரமடைவதற்குள் தூர்வார நடவடிக்கை எடுக்கவேண்டும் என, சிறு விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## அரசு தோட்ட கலை பண்ணைக்கு தயார்படிகள் விற்செணையில் பூச்

காஞ்ணையில்தாங்கல் அரசு தோட்டக் கலை பண்சந்விச்:புரம்சி, ஆந்திரா ரோஜாப்பூ, மல்லி செடிகள் மானிய விலையில் விற்.ளனராக உள்ளைக்கு தயாப காஞ்புரம்சி, விச்மத்தில்தாங்கல் கிராசந், 57 ஏக்கரில், அரசு தோட்கலை டக் பண்ணை இயங்கி வருஇங்கு .றதுகி, கொய்யா, மல்லி, ரோஜா ஆகிய செடிகளும், தேக்கு, மா ஆகிய மரக்களும்றுகன், விவளுக்கு மானிய விலையில்கயிசா விற்-பகப் ளதை அடுத்துபருவ மழை துவங்கி உள் .கின்றனடு, எல்.45 ரக கொய்யா, ராமேஸ்-வரம் மல்லி செடிகள், ஆந்திரா ரோஜா

ஆகி.ளனடுள்பட்கப்னைக்கு வைக்பயவை விற்

விச்தாங்கல்சந் அரசு தோட்டக் கலை அலுகையில்கிரி கூறுவலர் ராஜ, "செடிகள் 50 சதவீதம் மானிய விலையில் விற்-சிமணம் நிகழ்ச்திரு .றனகின்பட்டு வருகப் களில், தேங்காய் சாத்லாகளுக்கு பதிபூல பைகடிக்கு ஆகிய தாம்குதுக், இது-.கலாம்களை கொடுக்போன்ற செடி

"ஒரு ரோஜா செடி மானிய விலையில், 10 ரூபாய்க்கு விற்கப்

பளுக்குகரங்விவ .றதுகிடு, 98942 35782 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்," என்றார்.

## மழையால் பயிர்யுரம்ளுக்கு அடிக, யூரியா பலன்-தேங்கும் நீரை வெளி !வீண்... யிகள் புலம்பல்சாயேற்றும் விவ

ஆர்மையில் பெய்த மழையால்அண்:பேட்டை.கே., வயல்ளவு தண்ணீர்ககளில் அதி தேங்கி உள்ளதால், அடிவற்றின் பலன்யயுரம் மற்றும் யூரியா ஆகி கிடைக்காமல் இ .டதுவிட்போய்தனால், மீண்டும், உரங்கள் இடவேண்டும் என, விவயிகள் சா .றனர்கின்புலம்பு

மாவட்டத்தில், 80 ஆயிரம் ஹெக்டேரில் நெல், 8,400 ஹெக்டேரில் கரும்பு, 9,200 ஹெக்டலைகடேரில் நிலக் பயிடத்தில்ஆடி பட் .ளதுபட்டு உள்டப்ரி, மத்திய கால ளானகநெல் ரகங் வெள்ளை பொன்னி, பாபட்லா, குறுளான ககிய கால ரகங் .டி.டி.ஏ, 36, ஏ.டி.டி., 37, ஏ.டி.டி., 39, சூப்பர் பொன்னி மற்றும் 135 நாள் பயிரான சம்பா மசூரி என்ற புதிய ரகமும் பயி.ளனபட்டு உள்டப்ரி

பாதிப்பு

இந்த நிலையில், மழையால், வயல்நீர் .ளதுளவு தண்ணீர் தேங்கி உள்ககளில் அதி பிடிப்பு பகுகளில்சாய நிலங்களில் உள்ள விவதி, தண்ணீர் தேங்கி உள் .ளது

இதனால், கரும்பு மற்றும் நிலக்ளுக்கு லேசான பாதிப்புகளிட்ட பயிர்டலை உள்க ஏற்.ளதுடுள்பட்

ஆனால், அதிக செலவில் நடப்-பட்கப்மளவு பாதிக்பட்டுள்ள நெல் வயல்கள் பெரு .ளனடுள்

நடவுக்கு முன்கத்திதராக சித்சத்து பயிதாக தழைச்ன, கொளஞ்சி மற்றும் பயறு வகைரிட்டுகளை பயி, நிலத்தில் தழைச்சிலர் .தனர்சத்து சேர்த், புங்கன், வேம்பு உள்.களை வெட்டி வயலில் உழுதுள்ளனர்ளிட்ட தழை

மேலும், ரசாயன அடி டத்தில் நடவுஆடி பட் .ளதுடுள்பட்யுரம் இடப்செய்த பயிர், தற்போது 30 முதல் 45 நாள் பயி-கமழைக்கு ஒரு சில நாட் .ளதுதுள்ராக வளர்ந் ளுக்கு முன்னால், களை எடுக்பட்டுகப், யூரியா போடப்.ளதுடுள்பட்

இந்த உரங்கள் மண்ணில் கலந்து, பயிர் வளர்ச்சிக்கு உதவும் என, எதிர்-திபார்த் ருந்த நிலையில் மழை பெய்து விட்.டது

இதனால், வயல்களில் தேங்கும் நீரை, விவயிகள்சா, தாங்யேற்ற கவே வெளிளாக .பட்டுள்ளதுடாயம் ஏற்டிய கட்வேண்

இந்த தண்ருடன்ணீ, உரச்பேட்டை.கே.ஆர் .றனகின்யேறி வருகளும் வெளிதுக்சத் ஒன்யத்தில்றி, பீமாடியூர்ரெட், சானுார்வரம்லாமல், பத்மாபுரம் உள்-திளிட்ட பகு .றதுகிகளில் தண்ணீர் தானாக வழிந்து வரு

செலவு

இது குறித்து, நீலோத்கையில்யிகள் சிலர் கூறுசாபுரம் கிராம விவபால், 'பீமா-ரெட்

டியூர், பைவகளில் இருந்துகளில் உள்ள மலைதிளிட்ட பகுலசா உள் உருவாகும்
 களில் தண்ணீர் வரத்துஓடைதொடர்ந்து உள்மாகணஇதன் கார .ளது, வயல்களில்
தண்ணீர் ஊற்றாக சுரந்து வருகிறது,' என்றனர்.

மேலும், 'வயலில் இருந்து தண்ணீர் வெளிவதால்யேறி வரு, ஏற்னவே போட்ட க
உரத்தின் பலன் பயிர்காமல்ளுக்கு கிடைக்க, தண்யேறி ருடன் சேர்ந்து வெளிணீ
.டதுவிட் மழை விட்டாலும், ஊற்று சுரப் .திற்கு தொடரும்பது ஒரு வார காலத்
அதன் பிறகு மீண்டும், பயிர்வேண்டும்களை இடளுக்கு உரங்க,' என்றனர்.

நெல் வயலில் மீன் பிடிப்பு

ஏரிகளில் தண்ணீர் ஓரளதால்யுள்பிவிற்கு நிரம்ள, மதயாக தண்ணீர்குகள் வழி
திறந்து விடப்களிஏரி .ளதுடுள்பட்ல் வளர்க்பட்டு வந்த மீன்கள்கப், வெள்ளத்தில்
அடித்துச் செல்வாய்கள்போக்கு கால் .றனகின்டுபலப் சீரதாலும்தடாபகப்மைக்,
மழை காரகவும்மாண, வயல்களில் நீர் பாய்ந்து வரு.றதுகி

இதன் காரமாகண, நெல் மற்றும் கரும்பு வயல்களை சிகளில் நீருடன் வரும் மீன்று-
.வர்கள் பிடித்து வருகின்றனர்

### சம்பா பருவ சாகுபடிக்கு 415 டன் உரம் சப்ளை

விக்கிரவாண்டி விழுப்புரம் மாவட்ட விவசாய பணிக்காக ஆயிரத்து:415 டன் உரம்
ரயில் மூலம் வந்து சேர்ந்தது.

விழுப்புரம் மாவட்டத்தில் தற்போது சம்பா பருவ நெல் சாகுபடி பணிகள் நடந்து
வருகின்றன. இதற்கு தேவையான உரங்கள், சென்னை ஆவடியிலிருந்து ரயிலில்
65 டன் காம்ப்ளக்ஸ் உரம் மற்றும் ஆயிரத்து 350 டன் யூரியா அனுப்பி
வைக்கப்பட்டது.

இந்த உர மூட்டைகள் நேற்று மாலை 3:00 மணிக்கு முண்டியம்பாக்கம் ரயில்
நிலையத்திற்கு 21 பெட்டிகள் மூலம் வந்து சேர்ந்தன.

கம்பெனி துணை மேலாளர்கள் துரை பாண்டியன், பார்த்தீபன், ராஜா ஆகியோர்

மேற்பார்வையில் உர மூட்டைகளை தொழிலாளர்கள் லாரியில் ஏற்றி, உர விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

## மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி பணிகள்

விழுப்புரம் விழுப்புரம் மாவட்டத்தில்:6 லட்சத்து 63 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது.

தேசிய அளவிலான கோமாரி நோய் தடுப்பூசி பணிக்கான செயல் திட்டத்தில் 130 குழுக்கள் அமைக்கபட்டுள்ளது இந்த பணி கடந்த .18ம் தேதி முதல் தொடர்ந்து மூன்று வாரங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

விழுப்புரம் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு குளிர்பதன அறையில் கோமாரி நோய் தடுப்பூசி வைக்கப்பட்டுள்ளதுதினந்தோறும் தேவையான மருந்து மட்டுமே . குளிர்பதன நிலையில் எடுத்துச் சென்று தடுப்பூசி போடப்படுகிறது.

ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் 5வது கட்டமாக தற்போது மேற்கொள்ளப்படும் முகாமில், விவசாயிகள் தங்களின் கால்நடைகளுக்கு தவறாமல் கோமாரி நோய் தடுப்பூசி போட்டு பயனடய கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இத்தகவலை கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

## கரும்பு விவசாயிகள் ஆலோசனை

திருவெண்ணெய் நல்லூர்பெரியசெவலையில் கரும்பு விவசாயிகள் மற்றும் : டிராக்டர் உரிமையாளர்கள் சங்கம் சார்பில் ஆலோசனைக்கூட்டம் நடந்தது. சங்க தலைவர் அறிவுடைநம்பி தலைமை தாங்கினார்செங்கல்வராயன் கூட்டுறவு . சர்க்கரை ஆலை இயக்குனர் சேகர், சங்க செயலாளர் பாலமுருகன், ராஜி, அருள், கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் ரகோத்தமன் முன்னிலை வகித்தனர். அமைப்பாளர் தேவநாதன் வரவேற்றார். செங்கல்வராயன் சர்க்கரை ஆலை தலைவர் ஞானமூர்த்தியை மாநில இணைய தலைவராக நியமித்த முதல்வருக்கு நன்றி தெரிவித்தல், ஆலை வளாகத்தில் கரும்பு ஏற்றிவரும் வாகனங்களுக்கு இடவசதி செய்து தரவேண்டும் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இரண்டு சரத்பவார் - மூன்று வாரத்தில் வெங்காயம் விலை குறையும் -

புதுடில்லி இரண்டு அல்லது மூன்று வாரத்தில் வெங்காயம் விலை குறையும் என : மத்திய விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்வெங்காயத்தை . உரித்தால் தான் கண்ணீர் வரும் என்றால் இப்போது அதன் விலையை கேட்டாலே கண்ணீர் வரத் துவங்கியுள்ளனகடந்த சில மாதங்களாகவே வெங்காயத்தின் . விலை அதிவேகமாக உயர்ந்துள்ளதுதற்சமயம் டில்லியில் ஒரு கிலோ வெங்காயம் . விலை ரூ.80 விற்பனையாகிறது.

சமீபத்தில் வெளிவந்த பணவீக்கம் உயர்வுக்கு முக்கிய காரணமே வெங்காயத்தின் விலை அதிகமாக உயர்ந்தது தான்கடந்த ஓர் . ஆண்டில் மட்டும் வெங்காயத்தின் விலை 245 சதவீதம் உயர்ந்துள்ளதுதொடர்ந்து . வெங்காயத்தின் விலை அதிகரித்து வருவதாக இன்னும் விலை உயரக்கூடும் என்ற கணிப்பில் ஏராளமாக பதுக்கல்களும் நடந்து வருகிறது.

இந்நிலையில் வெங்காயத்தின் விலை விரைவில் குறையும் என மத்திய விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார்இதுகுறித்து அவர் . கூறியுள்ளதாவது, மகாராஷ்டிரா மற்றும் பிற மாநிலங்களில் வெங்காயத்தின் உற்பத்தி அதிகரித்து இருக்கிறது. இதுதொடர்பாக விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடமும் பேசியுள்ளோம், மேலும் வெளிநாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறதுஇதனால் . இன்னும் இரண்டுமூன்று - .வாரத்தில் வெங்காயத்தின் விலை குறையும் என்றார்

இதே கருத்தை மத்திய உணவுத்துறை அமைச்சர் கே.தாமஸும் கூறியுள்ளார்.வி. அக்டோபர்ளைச்சல் அதநவம்பரில் வெங்காயத்தின் வி-ிகரிக்கும் என்பதால் விரைவில் விலை குறையும் என்று கூறியுள்ளார்.

முன்னதாக அமைச்சர் சரத்பவார், ஒரு செய்தி நிறுவனத்துக்கு வெங்காயம் விலை ஏற்றம் தொடர்பான கேள்விக்கு, இது எனது துறை கிடையாது, நுகர்வோர் விவகாரத்துறை தான் இதை கவனிக்கிறதுவெங்காயம் விலை குறைந்தப .ோது

விவசாயிகளிடம் சென்று ஒருவரும் அதை கேட்கவில்லை, இப்போது விலை ஏறிய பின்னர் விவசாயிகள் அதிக லாபம் பெறுகின்றனர்ஆனால் அதை அனைவரும் . குற்றமாக பார்க்கின்றனர் என்று கூறியிருந்தார்.

கபில்சிபல் அளித்த பேட்டி ஒன்றில், அரசாங்கம் ஒன்று வெங்காயத்தை விற்பனை செய்யவில்லை, வியாபாரிகள் தான் விற்பனை செய்கிறார்கள், ஏன் இந்த கேள்வியை அவர்களிடம் கேட்க கூடாது என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.09.2013**

## மத்திய அரசு அதிரடி நடவடிக்கை வெங்காயம் ஏற்றுமதி விலை அதிகரிப்பு



புதுடெல்லி வெங்காயம் :விலை கடுமையாக உயர்ந்து வருவதால், விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையாக அதன் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மத்திய அரசு அதிகரித்துள்ளதுவெங்காயம் விலை கடந்த . சில வாரங்களாக கடுமையாக உயர்ந்து வருகிறதுவடமாநிலங்களில் தற்போது . .கிலோ ரூ80 வரை விற்கப்படுகிறது.தமிழகத்தில் ரூ .50 வரையில் விற்கப்படுகிறதுஉள்நாட்டில் . தேவை அதிகமாக இருக்கும் நிலையில், வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதால், அதன் விலை கடுமையாக அதிகரிப்பதாக பல்வேறு தரப்பில் குற்றம்சாட்டப்படுகிறது.

இந்நிலையில், வெங்காயம் ஏற்றுமதிக்கு தடை விதிக்காவிட்டாலும், அதன் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மட்டும் மத்திய அரசு நேற்று அதிகரித்துள்ளது .

அதாவது இதுவரையில் ஒரு டன் வெங்காயத்தின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 650 அமெரிக்க டாலராக .ரூ)40,300) இருந்ததுநேற்று முதல் அது ., 900 டாலராக .ரூ)55,800) உயர்த்தப்பட்டுள்ளதுஇந்த விலைக்கு குறைவாக வெங்காயத்தை . ஏற்றுமதி செய்ய முடியாது என்பதால், அதன் ஏற்றுமதி கணிசமாக குறைந்து, உள்நாட்டில் விலை குறைய வாய்ப்புள்ளது.

அத்தியாவசியப் பொருளா?

அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்கீழ் மீண்டும் வெங்காயம் கொண்டுவரப்படுமா என்று கேட்டதற்கு, இதுபோன்ற திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்று மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் கேபதுக்கல் .தாமஸ் கூறினார் .வி., செயற்கை தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு போன்றவற்றில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கப்பதற்கும் அவர்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் எளிதில் கிடைப்பதையும் உறுதி செய்வதற்காக அத்தியாவசியப் பொருள்கள் சட்டம் இயற்றப்பட்டது.

எக்ஸ்ட்ரா தகவல்

அத்தியாவசியப் பொருள் சட்டம்,1995ன் பட்டியலில் இருந்து, 2004ல் வெங்காயம் நீக்கப்பட்டது. துவக்கத்தில் இந்த பட்டியலில் 130 பொருட்கள் இருந்தன . தற்போது7 பொருட்களே உள்ளன.

# இன்றைய வேளாண் செய்திகள்

## 20.09.2013

## வெங்காய ஏற்றுமதி விலை 900 டாலராக நிர்ணயம்



புதுடெல்லி

வெங்காயம் மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை 900 டாலராக (டன் ஒன்றிற்கு) மத்திய அரசு உயர்த்தி உள்ளது. விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்து வரும் விலையை கட்டுப்படுத்தும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆகஸ்டு 14–ந் தேதி மத்திய அரசு வெங்காயத்தின் ஏற்றுமதி விலையை 650 டாலராக நிர்ணயித்தது. அதாவது இந்த விலைக்கு குறைவாக நிறுவனங்கள் ஏற்றுமதி செய்யக் கூடாது. இதன் காரணமாக ஆகஸ்டு மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி 29,000 டன்னாக குறைந்தது.

இந்நிலையில் ஒரு கிலோ வெங்காயம் விலை மீண்டும் சுமார் ரூ.80–ஆக உயர்ந்துள்ளது. எனவே உள்நாட்டில் சப்ளையை அதிகரிக்கும் வகையில் ஏற்றுமதியை கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தற்போது

ஏற்றுமதி விலை 38 சதவீதம் உயர்த்தப்பட்டு 900 டாலராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**அந்தியூர் பகுதியில் மஞ்சள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : Sep 20 | 02:53 am



அந்தியூர்,

அந்தியூர் பகுதியில் கடந்த ஆண்டு சரியாக மழை பெய்யவில்லை. அதனால் அந்தியூர் மற்றும் எண்ணமங்களம், கோயிலூர், சென்னம்பட்டி, வெள்ளித்திருப்பூர், அத்தாணி ஆகிய பகுதியில் விவசாயிகள் பருவநிலைக்கு ஏற்ப மக்காசோளம், சோளம் ஆகியவற்றை சாகுபடி செய்து வந்தனர்.

கடந்த இரண்டு மாதங்களாக அந்தியூர் மற்றும் சுற்றுப்புறப்பகுதிகளில் மழை விட்டு, விட்டு பெய்து வருகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து உள்ளது. ஏரி மற்றும் குளங்களிலும் அதிக அளவில் தண்ணீர் தேங்கி கிடக்கிறது.

எனவே விவசாயிகளின் பணப்பயிரான மஞ்சள், வாழை, கரும்பு ஆகிய பயிர்களை சாகுபடி செய்ய தொடங்கி உள்ளனர். அந்தியூர் பகுதியில் ஏராளமான விவசாயிகள் அதிக அளவில் மஞ்சள் சாகுபடி செய்து உள்ளனர். தொடர்ந்து மழை பெய்து வருவதால், மஞ்சள் செடிகள் நன்கு செழித்து வளர்ந்து வருகிறது.

எனவே வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், பயிர்களுக்கு தேவையான நூண்ணுட்ட சத்து, பூச்சிகொல்லிகள், மருந்துகள் ஆகியவற்றை

மானிய விலையிலும், அவைகளை பயன்படுத்த பயிற்சியும் அளிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 காசுகள் உயர்வு 335 காசுகளாக நிர்ணயம்**

பதிவு செய்த நாள் : Sep 19 | 07:15 pm



நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 330 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 5 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே, முட்டை கொள்முதல் விலை 335 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–333, ஐதராபாத்–308, விஜயவாடா, தனுகு–317, பார்வாலா–309, மும்பை–340, மைசூர்–327, பெங்களூர்–325, கொல்கத்தா–343, டெல்லி–321.

கறிக்கோழி கிலோ ரூ.58–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.6 குறைக்க முடிவு செய்தனர். எனவே, கறிக்கோழி விலை கிலோ ரூ.52 ஆக குறைந்து உள்ளது. முட்டைக்கோழி விலை கிலோ ரூ.55 ஆக நிர்ணயம் செய்யப்பட்டாலும், கிலோவுக்கு ரூ.5–க்கு மேல் குறைத்து கொடுக்க வேண்டாம் என தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு வலியுறுத்தி உள்ளது.